பதிவஞ்சல் மூலமாக
ந.க.எண்.74307/ ப.தொ.4 / 2015 / இரு.3

பொதுசுகாதாரம்மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை, சென்னை – 6.
நாள் : 17.12.2020.

பொருள் : பணியாளர் தொகுதி – பொது சுகாதாரம் - தமிழ்நாடு அமைச்சுப்பணி திரு.அ.எட்வின் லாரன்ஸ் த/பெ (அமரர்) திரு. எஸ்.அருள்ராஜ் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு பணிவரன்முறைப்படுத்தப்பட்டது – ஆணை வரப்பெற்றது – தொடர்பாக.

பார்வை :
1. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், நாகர்கோவில் அவர்களின் ந.க.எண்.937/அ6/2004, நாள்.31.07.2015.
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.74037/பதொ4/2015 /இரு3, நாள்: 25.08.2018.
3. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், நாகர்கோவில் அவர்களின் ந.க.எண்.3465/அ1/2018, நாள்.07.09.2018.
4. அரசாணை (2ப) எண்.132, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி1) துறை, நாள்.11.11.2020.
5. அரசு கடித எண்.33599/ஏபி1/2019–3, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை நாள்.11.11.2020

-- -- -- -- -- --

பார்வையில் ஒன்றில் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி திரு.அ.எட்வின் லாரன்ஸ் என்பவர் கருணை அடிப்படையில் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், நாகர்கோவில் அலுவலகத்தில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டார்.

2. பார்வை நான்கில் காணும் அரசாணையின்படி தனியர் பணியில் இணைந்த நாளான 29.08.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறைப்படுத்தப்பட்டு ஆணை வெளியிடப்பட்டதை தொடர்ந்து தனியரின் அனைத்து அசல் சான்றிதழ்களும் பார்வை ஐந்தில் காணும் அரசு கடிதத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது.

3. எனவே, துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், நாகர்கோவில் அவர்களை தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் கருணை அடிப்படையில் பணிநியமனம் தொடர்பாக பெறப்பட்ட தனியரின் கீழ்கண்ட அனைத்து சான்றிதழ்கள், அரசாணை மற்றும் மறைந்த அரசு ஊழியர் திரு.எஸ்.அருள்ராஜ் என்பவரின் பணிப்பதிவேடு ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அதனை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகையை அளிக்குமாறு துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், நாகர்கோவில் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

| | |
|---|---|
| 1 | பத்தாம் வகுப்பு சான்றிதழ் (அசல்) |
| 2 | மாற்றுச் சான்று (அசல்) |

சு.தாமரைசெல்வம்
துணை இயக்குநர் (நிர்வாகம்)

பெறுநர்:
துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் நாகர்கோவில் அரசாணை(2ப) எண்.132, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி1) துறை, நாள்.11.11.2020. அசல் ஆணை தனியருக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். (அரசாணை இணைக்கப்பட்டுள்ளது)

நகல்:
திரு.அ.எட்வின் லாரன்ஸ், இளநிலை உதவியாளர்
துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் நாகர்கோவில்
துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் நாகர்கோவில் – மூலமாக
இருப்புக்கோப்பு – உபரி –2.

// உண்மைநகல் - உத்தரவின்படி -அனுப்பப்படுகிறது //

கண்காணிப்பாளர்

K.Dis.No.11848/A1/18 dt. .2.21
Forwarded

Deputy Director
Health Services
Nagercoil.

4/2/21

To
Thiru. A. Edwin Lawrence,
Junior Assistant of
this office.

சுருக்கம்

பொதுப் பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை – திரு.அ.எட்வின் லாரன்ஸ், இளநிலை உதவியாளர், த/பெ. (அமரர்) திரு.எஸ்.அருள்ராஜ், சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகம், நாகர்கோவில் சுகாதாரப் பகுதி மாவட்டம் – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி1) துறை

அரசாணை (2ப) எண். 132 — நாள்: 11.11.2020.

திருவள்ளுவர் ஆண்டு–2051
சார்வரி, ஐப்பசி – 26

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கடித எண்.74307/ப.தொ.4/இரு.3/2015, நாள் 19.07.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020

-----

ஆணை:

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் நாகர்கோவில் சுகாதார மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகத்தில் ஊர்தி ஓட்டுநராக பணியாற்றி வரும்போது 18.10.2004 அன்று பணியிடை மரணமடைந்த அரசு ஊழியர் திரு.எஸ்.அருள்ராஜ் என்பவரின் மகன் திரு.அ.எட்வின் லாரன்ஸ் என்பவர் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 29.08.2018 அன்று முற்பகல் நாகர்கோவில் சுகாதார மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகத்தில் பணியில் இணைந்தார் என்று தெரிவித்து தனியரின் தற்காலிகப் பணியினை, அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 29.08.2018 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடித்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. அரசு, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை, 03.08.2010 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் கடித எண்.19205/க்யூ1/2010 மற்றும் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை ஆகியவற்றில் அறிவுறுத்தியுள்ளவாறு, சான்றிதழ்கள் / ஆவணங்கள் ஆகியவற்றுடன் ஆய்வு செய்தபோது, திரு.அ.எட்வின் லாரன்ஸ் என்பவர் கருணை அடிப்படை பணி நியமனம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

3. மேலும், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உள்ளீட்டெல்லைக்குள் வரும் பதவிகளில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தேர்வாணையத்தின் இசைவு பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள நிலையில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.அ.எட்வின் லாரன்ஸ் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 29.08.2018 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பதவிக்கான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்யலாம் என்று அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியினை முன்னாளிட்டு வரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

4. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண்.17368/க்யூ1/2020-2, நாள் 03.11.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண். 28602/ஜி2/2020, நாள் 06.11.2020 ஆகியவற்றின் ஒப்புதலோடு இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை-600 006.
தனியர், (பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர்,
சென்னை – 600 006 வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை- 600 018.
மாவட்ட கருவூல அலுவலர், நாகர்கோவில்

<u>நகல்</u>
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவு பிரிவு) துறை, சென்னை-600 009.
இருப்பு கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்